www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

*

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 x 1 = 4

1. தூண் என்னும் பொருள் தரும் சொல் ________.
   அ) நெகிழி ஆ) சென்னி
   இ) ஏணி ஈ) மதலை
2. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ________.
   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்
   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
3. பல பொருள் தரும் ஒரு சொல் என்பது ________.
   அ) இயற்சொல் ஆ) திரிசொல்
   இ) திசைச்சொல் ஈ) வடசொல்
4. தொல்காப்பியம் கடற்பயணத்தை ________ வழக்கம் என்று கூறுகிறது.
   அ) நன்னீர் ஆ) தண்ணீர்
   இ) முந்நீர் ஈ) கண்ணீர்

**ஆ) பொருத்துக.** 4 x 1 = 4

5. மீகாமன் - கப்பல்
6. முகில் - பெற்றம்
7. வங்கம் - மேகம்
8. திசைச்சொல் - கப்பல் செலுத்துபவர்

**இ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 x 2 = 10

9. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
10. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
11. தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
12. மனிதப் பிறவிக்கும், பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
13. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
14. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
15. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன? சான்று தருக.

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 3 x 3 = 9

16. கலங்கரை விளக்கம் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.
17. பண்டையத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.
18. 'இன்பத் தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
19. கல்வியையும், விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
20. திரி சொல்லின் வகைகள் குறித்து விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



உ) பின்வரும் மனப்பாடப்பகுதிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 1x4=4

21. அ) 'வானம் ஊன்றிய' எனத்தொடங்கும் பெரும்பாணாற்றுப்படை பாடல்.

(அல்லது)

ஆ) 'வைப்புழிக்' எனத் தொடங்கும் நாலடியார் பாடல்.

ஊ) பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7x1=7

22. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

ஏற்றுமதி

23. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

கண்மணி நாளை பாடம் படித்தாள்.

24. பொருள் எழுதுக.

அ) தீ ஆ) பா

25. இரு பொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.

மாலை

26. கலைச்சொல் தருக :

அ) Marine technology

ஆ) Sailor

27. சேர்த்து எழுதுக :

அ) இன்று + ஆகி

ஆ) என்று + உரைக்கும்

28. பிரித்து எழுதுக.

அ) கேடில்லை

ஆ) பெருங்கடல்

எ) விரிவான விடையளி. 1x6=6

29. அ) 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

ஏ) கட்டுரை (அல்லது) கடிதம் எழுதுக. 1x6=6

30. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

பயணங்களின் பலவகை

முன்னுரை - பயணத்தின் தேவை - தரைவழிப் பயணம் - கடல்வழிப் பயணம் - வான்வழிப் பயணம் - முடிவுரை.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் வரைக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com